இந்து தமிழ் திசை

4 CHENNAI சனி, நவம்பர் 24, 2018

## ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மையத்தில்

# குழந்தையின்மைக்கு இலவச பரிசோதனை முகாம்

■ சென்னை

ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மையத்தில் செயற்கை கருத்தரிப்பு மருத்துவத் துறை சார்பில் இலவச பரிசோதனை முகாம் வரும் 28-ம் தேதி நடைபெறவுள்ளது.

இராமசாமி உடையார் பிளாக், (SMART) E2, இரண்டாம் தளத்தில் நவ.28-ம்தேதி (புதன்கிழமை) காலை 8:00 மணி முதல் பிற்பகல் 1:00 மணி வரை இலவச பரிசோதனை முகாம் நடைபெறும். இதற்காக பதிவு செய்துகொள்பவர்களுக்கு சில பரிசோதனைகள் இலவசமாகவும், சில குறைந்த கட்டணத்திலும் செய்யப்படும்.

குழந்தையில்லாத தம்பதியர் இம்முகாமில் கலந்துகொள்ளலாம். ஏற்கெனவே சிகிச்சைகள் பெற்றிருந்தால் அந்த பதிவுகளை எடுத்துவர வேண்டும். மேலும் விவரங்களை அறிய 044-45928544 என்ற தொலைபேசி எண்ணில் (காலை 8 முதல் மாலை 4 மணி வரை) தொடர்புகொள்ளலாம்.

இவ்வாறு ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.